1971 மார்ச் 26] [பேரவைத் தலைவர்]

7. திரு. கே. டி. கே. தங்கமணி.
8. திரு. ஏ. ஆர். பெருமாள்.
9. திரு. திருப்பூர் ஏ. எம் மொய்தீன்.
10. டாக்டர் எச். வி. ஹாண்டே.
11. திரு. ஏ. ஆர். மாரிமுத்து.
12. திரு. ஈ. எஸ். தியாகராசன்.

பேரவைத் தலைவர் அலுவல் காரணமாக இக் குழுவின் தலைவர் ஆவார்.

அலுவல் ஆய்வுக் குழுவின் முதல் கூட்டம் இன்று பகல் 11 மணிக்குப் பேரவைத் தலைவர் அறையில் நடைபெறும்.

(இ) தமிழ் நாடு 1971-ம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்பு மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ் நாடு 1971-ம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்பு மசோதாவை அறிமுகம் செய்ய குடியரசுத் தலைவர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

4. அரசினர் மசோதா.

தமிழ்நடு 1971-ம் ஆண்டு நகர-நட்டுப்புற அமைப்பு மசோதா

மாண்புகுமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1971-ம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்பு மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு,அனுமதி அளிக்கப்பட்டது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இம்மசோதாவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம்மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

5. அரசினர் தீர்மானங்கள்.

(அ) அவையுரிமைக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, அவையுரிமைக் குழுவிற்கு பதினைன்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க கல்வி—வருவாய்த் துறை அமைச்சர் தீர்மானம் கொண்டு வருவார்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ் நாடு சட்டப் பேரவையின் 193-வது விதியின்கீழ் 1971-72-ம் நிதியாண்டுக்குரிய அவையுரிமைக் குழுவின் உறுப்பினர்களாய் இருக்கும்படி பதினைந்து உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

2. அறிவிப்புகள்--தொடர்ச்சி.

(ஈ) அவையுரிமைக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ், அவையுரிமைக் குழுவிற்கு committee of Privileges உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 30-3-1971, செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 30-3-1971, செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 2-4-1971,வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதினைந்திற்கு மேற்படுமாயின் 3—4—1971, சனிக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே உறுப்பினர்கள் ஓய்வறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

5. அரசினர் தீர்மானங்கள்---தொடர்ச்சி

(ஆ) அவையினர் குழுவிற்குத் தேர்தல்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ் நாடு சட்டப் பேரவையின் 221(1)வது விதியின் கீழ் 1971-72-ம் நிதியாண்டுக்குரிய அவையினர் குழுவின் உறுப்பினர்களாய் இருக்கும்படி பதின்மூன்று உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்"

என்கிற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.